**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 03.08.2022

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்**
**75வது சுதந்திர திருநாள் அமுத பெருவிழா கொண்டாட்டம்**

தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் , கோயம்புத்தூர் சார்பில் எழுபத்தி ஐந்தாவது சுதந்திரதின விழா கொண்டாட்டமானது, ஆகஸ்ட் மாதத்தின் முதல் மற்றும் இரண்டாம் வாரத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளை உள்ளடக்கி பள்ளிக்கூட வளாகங்களால் கொண்டாடப்படவுள்ளது.

இவ்விழாவானது, கார்ப்பரேசன் உயர்நிலைப் பள்ளி , பாப்பநாயக்கன் புதூர் மற்றும் சா .பூ.வீ. அரசுமேல் நிலைப்பள்ளி , சீரநாயக்கன்பாளையம் கோவை –7. ஆகிய பள்ளிகளின் வளாகத்தில் குழந்தைகளின் மனதில் தேசிய ஒருமைப்பாட்டையும், நாட்டுப்பற்றையும் வளர்க்கும் நோக்கத்தில் , நாட்டின் சுதந்திரத்திற்காக போராடிய தேசத்தலைவர்களைப் பற்றிய கவிதைப்போட்டி, கட்டுரைப்போட்டி, ஓவியப்போட்டி, பாட்டுப்போட்டிகள் நடத்தி , வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளது . இவ்விழாவில், பள்ளிகளின் வளாகத்தில் , மரக்கன்றுகள் நட்டு நமது தாய் நாட்டின் சுற்றுச்சூழலைக்காக்கும் வண்ணம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் வெ. கீதாலஷ்மி அவர்களின் வழிகாட்டுதலின்படி , இந்த சுதந்திர தின விழாவானது தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் முனைவர் பெ . ஐரின்வேதமணி அவர்களின் தலைமையில் பள்ளிக்குழந்தைகள் மற்றும் தோட்டக்கலைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மாணவர்களையும் இணைத்து இவ்விழாவானது கொண்டாடப்படவுள்ளது.

மக்கள் தொடர்பு அலுவலர்